**<u>2 வது  கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>**

**<u>அ.வ.எண்.410/2019</u>**

**13.02.2024 பி.வா.சா.1. திரு.  சமுத்திரம்**

**<u>2 முதல் 4 மற்றும் 6  பிரதிவாதிகள் தரப்பில்  குறுக்கு  விசாரணை</u>**

1. வழக்கு சொத்தான சர்வே எண். 190/2 அரசாங்கத்தால் மனை பிரிவுகளாக வழங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்து 29.05. 1994 அன்று அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்டது. அப்போது மொத்தம் 60 இலவச பட்டாக்கள் வழங்கப்பட்டது அதில் பாதி பேர் வீடு கட்டிவிட்டார்கள். மீதி இடம் காலி மனையாக உள்ளது என்றால் சரிதான்.  அந்த பகுதியில் இவ்வழக்கின் 2 முதல் 4 மற்றும் 6 பிரதிவாதிக்கும் இடம் உள்ளது என்றால் சரிதான்.